**தலைப்பு 286 - காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 286 - காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 22 ஆம் திகதி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 394.08 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 391.70 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2.38 மில்லியன் அதாவது 0.60 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 314.03 | 312.65 | 1.38 | 0.44 |
| மூலதனம் | 80.05 | 79.05 | 1.00 | 1.25 |
| மொத்தம் | 394.08 | 391.70 | 2.38 | 0.60 |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்கான வருமானக் குறியீட்டிற்காக ரூபா 45.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 36.97 கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 82.16 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | பற்றாக்குறை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 20.02.01.03 | 45.00 | 36.97 | 8.03 | 17.84 |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 16.20 | 16.09 | 14.20 | 15.76 | 70.00 | 52.63 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 7002/0000/00/0042/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 23.07 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ் வருகின்ற 4 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 71.92 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0068/000 | 0.64 |
| 6000/0000/00/0016/0020/000 | 68.49 |
| 6000/0000/00/0018/0025/000 | 2.63 |
| 6000/0000/00/0001/0006/000 | 0.16 |
| மொத்தம் | 71.92 |

### 2.6 கணக்காய்வு அவதானிப்பு

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பொது வைப்புக் கணக்குகள்

3 முதல் 6 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 66,210,414 கூட்டுமொத்தப் பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 வருமானக் கணக்கு

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 20:02:01:03 ஆம் வருமானக் குறியீடு - காணி மற்றும் ஏனைய வாடகை வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீடிற்குரிய ரூபா 50 மில்லியன் வருமானமொன்றைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 36.97 மில்லியன்

சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 74 சதவீதமாக இருந்தது.

(ii) 2015 இன் வருடாந்த மதிப்பீட்டில் வருமானமாக ரூபா 50 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், வருமானக் கணக்கில் அது ரூபா 45 மில்லியனாக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) முன்னைய ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை வருமானத்திற்கு நேரொத்ததாக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அளவு 28 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 11 சதவீதமாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் தேறிய வருமானம் வீழ்ச்சியடைந்தமை தொடர்பில் நிலுவை வருமான சேகரித்தலின் நலிவு காரணமாக இருந்தது.

(iv) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானம் ரூபா 22.34 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் நிலுவை வருமானம் ரூபா 20.28 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 15 சதவீதத்தால் நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்தது. மேலும் 03 வருடங்களை விஞ்சிய நிலுவை வருமானம் ரூபா 4.56 மில்லியனாக இருந்ததுடன் 1 வருடம் முதல் 2 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற நிலுவை வருமானம் ரூபா 13.50 மில்லியனாக இருந்தது.

(v) வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தரினால் நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்த போதிலும், வருமானம் சேகரித்தலுக்குரிய பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டமையின் காரணமாக ஏழு பிரதி காணி ஆணையாளர் அலுவலகங்களில் ரூபா 19.04 மில்லியன் தொகையான நிலுவை வருமானங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அசைவுறாது காணப்பட்டது.

(vi) நிதிப்பிரமாணம் 85 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சரியான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், குத்தகைக் காணி தொடர்பாக சரியான தகவல்கள் காணப்படாமையினால் வருமான மதிப்பீடு தயாரித்தல் முறையான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

28601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையைக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.90 மில்லியனாக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 1 வருடம் முதல் 26 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துதல்

நில அளவைத் திணைக்களத்திற்குரிய ஒரு வாகனம் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாகவும், காணி அமைச்சிற்குரிய 9 வாகனங்கள் 1 ½ வருடம் முதல் 7

வருடம் வரையான காலமாகவும் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களை முறையாகக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் தீர்க்கப்படாது வருடமொன்றிற்கு குறைவான காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 3.15 மில்லியன் பொறுப்புக்கள் காணப்பட்டது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 88,548 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 6 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 2.46 மில்லியனால் விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 1179 | 1,931,326 | வைத்திய உத்தியோகத்தர்கள் தவிர வேறு எந்தவொரு உத்தியோத்தருக்கும் தமது மாதாந்த சம்பளத்தை விஞ்சி படிகள் வழங்க முடியாதிருந்த போதிலும், திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்காக வருடாந்த திரண்ட சம்பளத்தை விஞ்சி பிம்சவிய ஊக்குவிப்புப்படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 104(4) | 182,202 | 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது விபத்திற்குள்ளாகிய 3 வாகனங்கள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூரண அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.7 செயலாற்றல்

2015 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முதலீட்டு செயற்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவைகளுக்காக பொருத்தமான 5000 ஏக்கர் காணியை இனங்காண்பதற்கும், முதலீட்டு செயற்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக வழங்கப்பட்ட 35 காணிக் கூறுகளின் பின்தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பின்வரும் செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(i) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொடுப்பனவுப் பத்திரம் வழங்குதல், முப்படைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பணி கையளித்தல் கட்டளை வழங்குதல், விடுவிப்புச் சான்றிதழ் பத்திரம் விநியோகித்தல், மத்திய தர கொடுப்பனவுப் பத்திரம் விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளின் இலக்குடன் ஒப்பிடும் போது செயன்முன்னேற்றம் முறையே 47 சதவீதம், 57 சதவீதம், 51 சதவீதம் மற்றும் 36 சதவீதமாக இருந்தன.

(ii) நிலுவை வரி வருமானத்தை அறவிடல் மற்றும் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல் போன்ற 2 செயற்பாடுகளின் இலக்குடன் ஒப்பிடும் போது செயன்முன்னேற்றம் 17 சதவீதமாக இருந்தது.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை மாற்றும் போது ஏற்றுக்கொள்ளக்கூடிய குறித்த திட்டத்தின் பிரகாரம் அது மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அந்த இலக்குகளை மாற்றுவதற்குரிய அங்கீகாரம் வழங்கப்பட்ட தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சுற்றுலா ஹோட்டல் செயற்திட்டமொன்றை நடாத்திச் செல்வதற்காக திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி கும்புறுப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணிப்பகுதியொன்று நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த குத்தகைப் பணம் மற்றும் மூன்று வருட தவணைப்பணம் என்பன முறையே ரூபா 2.10 மில்லியன் மற்றும் ரூபா 6.30 மில்லியனாக ரூபா 8.40 மில்லியன் கூட்டுத்தொகை ஒரே தடவையில் செலுத்தப்பட்டதன் பின்னர் காணியின் உரித்து குத்தகைக்கு எடுத்தவருக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், இந்த குத்தகைப்பணம் அறவிடப்படாமல் முறையற்றதாக காணியின் உரித்து 2010 திசெம்பர் மாதத்தின் போது கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சில சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்கள் சமர்ப்பித்து குத்தகைப் பணம் செலுத்தும் காலத்தை நீடிக்குமாறு விண்ணப்பதாரரினால் காணி ஆணையாளர் நாயகத்திடம் கோரப்பட்டிருந்ததுடன் பல சந்தர்ப்பங்களிலும் அந்த உதவியினை வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 21.73 மில்லியனைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆகஸ்ட் 29 ஆந் திகதி குத்தகையாளரினால் ரூபா 400,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் எந்தத் தொகையும் செலுத்தப்படாது காணியின் உரித்து வழங்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது காணி அமைச்சருக்கு வழங்கப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் மீண்டும் காணி மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு குறைவின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருடாந்த குத்தகைப் பணம் ரூபா 2.10 மில்லியனிலிருந்து ரூபா 1.78 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் அறவிடப்படுகின்ற வட்டியும் குறைக்கப்பட்டிருந்த போதும் அந்த நிறுவனம் தொடர்ச்சியாக குத்தகைப் பணம் செலுத்துவதை புறக்கணித்திருந்தது.

(ஈ) காணிக் கட்டளைச் சட்டத்தின் 86 ஆம் பிரிவு, 212 ஆம் காணிக் கட்டளை மற்றும் 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 96/5 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசுடமையாக்கப்பட்ட காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த காணிகளில் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது அரசாங்கத்தின் ஆதனமொன்று 6 வருடங்களுக்கு அண்மித்த காலமாக பயன்படுத்துதல் தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 முகாமைத்துவ நலிவுகள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்திற்குச் சொந்தமான 312 உத்தியோகபூர்வ இல்லங்களில் 95 வீடுகள் அதாவது 30 சதவீதம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) மேற்கூறப்பட்ட 312 வீடுகளில் 37 இல் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருந்து வருவதுடன் அந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை வீடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 22 உத்தியோகபூர்வ இல்லங்கள் பழுதுபார்க்க முடியாத வகையில் அழிவடைந்திருந்தது.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 50 | 36 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 38 | 13 | 25 |
| (iii) | இரண்டாம் நிலை | 678 | 443 | 235 |
| (iv) | ஆரம்ப நிலை | 134 | 99 | 35 |
| | மொத்தம் | 900 | 591 | 309 |